சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் : MCOP:68/2020

2023ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25ம் நாள் எதிர்மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் சாஸ்த்திரி (RW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

25.08.2023

1) நான் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த விபத்தில் சம்மந்தப்பட்ட TN 67 BY 1818 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் உரிமையாளர் நான் தான். என் வாகனத்தை நான் என் வீட்டில் மாட்டுதொழுவ அருகில் நிறுத்தியிருந்தேன். விபத்தில் இறந்தபோது இந்திரா என் வீட்டில் பணி செய்தார். வாகனத்திலிருந்து மாட்டு தீவனத்தை உருவியபோது கீழே விழுந்து காலில் அடிப்பட்டது. நான் கேட்டபோது மாட்டுதீவனத்தை உருவியபோது கீழே விழுந்ததாக சொன்னார். அப்போது என் மகன் இருசக்கர வாகனத்தில் பந்தல்குடி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். மருத்துவமனையில் கட்டுபோட்டு அனுப்பினார்கள்.

2) எனது வாகன ஓட்டுநர் கணேசன் மீது காவல்நிலையத்தில் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்தார்கள். பின்னர் விசாரணை செய்து முதல்தகவல்அறிக்கையில் உண்மை இல்லை என்பதை தெரிந்து கொண்டு வழக்கை ரத்து செய்துவிட்டார்கள்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

3) விபத்து சமயத்தில் என் வாகனம் காப்பீட்டு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். எனது வாகன ஓட்டுநர் கணேசனுக்கு முறையான ஒட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். விபத்தை பற்றி எனக்கு நேடியாக தெரியாது என்றும் ஓட்டுநர் சொல்லி தான் தெரியும் என்றால் ஓட்டுநர் அங்கு கிடையாது இந்திரா தான் காலில் தண்ணீர் ஊற்றி கொண்டிருந்தார் நான் கேட்டபோது சொன்னார். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் என் பண்ணை வீடு என்றால் சரிதான். விபத்து நடந்த அன்று என் ஓட்டுநர் தான் வாகனத்தை அங்கு நிறுத்தினார் என்றால் அன்றைய தினம் ஓட்டுநர் வரவே இல்லை. முந்தைய நாளே வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த வழக்கில் நான் 1வது எதிர்மனுதாராக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால்ச ரிதான். வழக்கறிஞர் மூலம் ஆஜராகியுள்ளேன் என்றால் சரிதான். எதிருரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4) என்னிடம் காட்டப்படுவது நான் கையெழுத்து போட்டு தாக்கல் செய்தது தான். அந்த எதிருரையில் பத்தி 4ல் அந்த வகையில் வீட்டில் நிறுத்தியிருந்த காரின் மீது ஏறி நின்று, அன்றை தினம் வீட்டு பரணியில் இருந்த மாசு மற்றும் குப்பை கூலங்களை சுத்தம் செய்ய முயன்றபோது நிலைதடுமாறி கீழே விழுந்து காலில் காயம்பட்டுள்ளார். அவ்வாறு ஏற்பட்ட காயத்திற்கு முறையாக சிகிச்சை எடுத்துக்சொள்ளாமல் மிகவும் அஜாக்கிரதையாக இருந்துள்ளார். அதன் காரணமாக அவரது கால் புண் அவர்களே எதிர்பார்க்காத அளவிற்கு பாதிப்பிற்கு உள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தபோது காலை அப்புறப்பட்டுள்ள வேண்டும் என்று மருத்துவர்களால் அறிவுறுத்தப்பட்ட உள்ளார். இவ்வாறான மருத்துவ சிகிச்சையில் எதிர்பாராத விதமான மேற்படி இந்திரா என்பர் கடந்த 15.10.2020 அன்று இறந்துபோனார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் என் எதிருரையில் சொல்லியிருக்கும் சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் நான்

நம்பதகுந்த ஆள் இல்லை என்றும் என்னுடைய சாட்சியம் ஏற்றுகொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல.

5) விபத்து நடந்த பிறகு விபத்தில் ஏற்பட்ட காயத்திற்காக இறந்துபோன இந்திர பந்தல்குடி ரமேஷ் கோமியோபதி மருத்துவமனையிலும் அதனை தொடர்ந்து அருப்புக்கோட்டையில் உள்ள அமர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் சரிதான். விபத்தை தொடர்ந்து சிகிச்சையிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் இந்திர இறந்துபோனார் என்றால் சரிதான். அருப்புக்கோட்டையில் உள்ள அமர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது விபத்தில் காயமுற்ற வலதுகாலை அப்புறப்படுத்திவிட்டார்கள் என்றால் சரிதான்.

6) அமர் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒருஇரு நாளில் இந்திரா இறந்துபோனார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. விபத்திற்கு என் வாகன ஓட்டுநர் காரணம் இல்லை என்றும் இந்திரா தானாக கீழே விழுந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. விபத்து சமயத்தில் சம்மந்தப்பட்ட வாகனத்தை கணேசன் ஓட்டினாரா இல்லையா என்று ஓட்டுநர் கணேசன் விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். கணேசன் விபத்திற்கு தான் காரணம் இல்லை என்று புகார் எதுவும் கொடுத்தாரா என்றால் விசாரணையில் சொன்னார். குற்ற வழக்கை எந்த வகையில் முடிக்கப்பட்ட சம்மந்தப்பட்ட புலன்விசாரணை அதிகாரியை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். விபத்து என் வாகன ஓட்டுநர் கணேசனின் கவனகுறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் வாகனத்தின் காப்பீட்டு நிறுவனமும், வாகனத்தின் உரிமையாளரான நானும் இழப்பீடு கொடுக்ககடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.